## 4. தலைப்பு 2 – பிரதம அமைச்சர் அலுவலகம்

---

### 4.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

---

நிதிப் பிரமாணம் 110 இன் பிரகாரம் இழப்புகள் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

### 4.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

---

''தொழுவ புராணய மற்றும் அம்புழுவாவ'' என்ற பெயருடைய புத்தகத்தில் 2000 பிரதிகளை அச்சிட்டதன் பின்னர் பகிர்ந்தளிக்கப்பட்ட முறை மற்றும் எஞ்சிய அளவு தொடர்பாகவும் 2014 நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களில் நடைபெற்ற விசேட கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்கள் தொடர்பான சான்றுகள் பிரதமர் அலுவலகத்தில் காணப்படாமையினால் ரூபா 1,636,825 கூட்டுத் தொகைக்குரிய கொடுக்கல் வாங்கல்களைக் கணக்காய்வின்போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 4.3 ஒதுக்கீட்டுக் கணக்கு

---

#### 4.3.1 பாதீட்டு முரண்கள்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செலவின விடயமொன்றிற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 400,000 மொத்தத் தேறிய நிதிஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) இரண்டு செலவின விடயங்களுக்கு ரூபா 821,250 மிகையான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னரான சேமிப்பு அந்தச் செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதியேற்பாட்டில் 59 சதவீதம் முதல் 92 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது.

(இ) பத்து மீண்டெழும் செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட தேறிய நிதியேற்பாடு ரூபா 2,438,229 இனால் விஞ்சி பொறுப்புகள் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருதன.

**4.4 இழப்புகளைப் பதிவழித்தல்**

அலுவலகத்தின் சொத்துக்களுக்கு ஏற்பட்ட இழப்புகளைப் பதிவழிப்பதற்காக 2014 திசெம்பர் 24 ஆந் திகதி குறை நிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீட்டின் மூலம் ரூபா 711,636 நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின்போது நிலுவையாக இருந்த முற்பணக் கடன் மீதியான ரூபா 38,836 அந்த நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தி பதிவழிக்கப்பட்டிருந்தது. 2013 ஆம் ஆண்டின்போது 10 சந்தர்ப்பங்களில் ஏற்பட்ட வாகன விபத்துக்களிலிருந்து அறவிடுவதற்கு முடியாதிருந்த ரூபா 672,798 தொகையான இழப்புகள் அரசாங்க செலவில் பழுதுபார்க்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின்போதும் இழப்புக்களைப் பதிவழிப்பதாகக் கருதி அரசாங்க செலவினத்தில் சேர்க்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அரசாங்கச் செலவினம் ரூபா 672,798 இனால் அதிகரித்திருந்தது.

**4.5 அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் நடைமுறைகளைப் பின்பற்றாமை**

அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளைப் பின்பற்றாது ரூபா 195,000 கூட்டுப் பெறுமதியான ஸ்டிக்கருடனான 250 கடிகாரங்கள் மற்றும் ரூபா 2,289,850 பெறுமதியான அட்ட பிரிகற மற்றும் சிவுறு பிரிகற என்பன கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

**4.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பிரதமர் அலுவலகத்தின் செயற்திட்டமான மாற்றுவழி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2014 மார்ச் 08 ஆந் திகதி முதல் 2014 செப்தெம்பர் 10 ஆந் திகதி வரையான காலத்தில் நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்ட பொதுசன ஊடகத்திற்கான கார்ட்டூன் ஒளிபரப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 11,050,888 செலவிடப்பட்டிருந்தது. 2014 யூலை 08 ஆந் திகதிய பிரதமரின் செயலாளரது குறிப்பின் பிரகாரம் 2014 யூலை 31 ஆந் திகதி முதல் அது பயனற்ற செயற்பாடாகக் கருதி கைவிடப்பட்டிருந்தது.

**4.7 மனிதவள முகாமைத்துவம்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 18 | 13 | 05 |
| (ii) | மூன்றாம் நிலை | 10 | 10 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 68 | 67 | 01 |
| (iv) | ஆரம்ப நிலை | 94 | 89 | 05 |
| | மொத்தம் | 190 | 179 | 11 |